மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

ராஜ்பவனை சுற்றுலா மாளிகையாக்கல்

*495 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போதுள்ள தமிழக ஆளுநரின் மாளிகையை சுற்றுலா மாளிகையாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுபற்றிய செயற்குறிப்பு இப்பொழுது எதுவும் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தற்போது புதிதாக வந்துள்ள ஆளுநர் தனது மாளிகையின் பரப்பளவினைக் குறைத்துக் கொள்வது பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாளிகையை மாற்றுவது பற்றி கருத்து தெரிவிக்கவில்லை. ஆனாலும், மாளிகையோடு ஒட்டியிருக்கின்ற நிலப்பரப்பை குறைத்துக்கொள்வது பற்றி கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகையிலுள்ள கவர்னர் மாளிகை ஆண்டுக்கு 10 மாதங்கள் யாரும் உபயோகிக்காமல் இருக்கிறதே, அதை அந்தப் பத்து மாதங்களில் நல்ல காரியத்திற்கு உபயோகப்படுத்த முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பத்து மாதங்களில் நல்ல காரியங்கள் எத்தனைக்கோ பயன்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன்: ஆளுநர் மாளிகை சம்பந்தமாக அகில இந்திய ரீதியில் கொள்கை வகுத்து, இப்படிப்பட்ட ஆடம்பரமான இடங்களைக் குறைப்பதுபற்றி மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது ஆலோசனை வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆளுநர் ஆடம்பரம் இல்லாத அளவில் இருக்க இவ்வளவு பெரிய இடம் தேவையில்லை என்கிற குறிப்புக்கள் அனுப்பப் பட்டு, இந்த மாளிகை மாற்றப்பட்டு, வேறு இடத்தில் வைக்கப்படலாம் என்று தமிழக அரசு முடிவு செய்து, அதற்கு ஒப்புதலை மத்திய சர்க்காரிடமிருந்து பெற வேண்டிய நிலைமை இருந்ததால், ஒப்புதல் பெற கடிதம் எழுதப் பட்டது. அந்தக் கடிதத்திற்குப் பதில் எழுதியதில், இந்த அரசின் நோக்கத்தைப் பாராட்டுவதாகவும், அதே நோக்கில் அகில இந்திய ரீதியில் எல்லா இடங்களிலும் மாற்றம் செய்ய வேண்டியிருப்பதால், பொறுத்திருக்க வேண்டும் என்றும் பிரதமர் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நமது ஆளுநர் மாளிகையை மாற்றும்போது, அந்த மாளிகையை எதற்கு உபயோகிப்பதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

1971 ஜூலை 28]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி முடிவு எடுத்து செயல்படும் போது, அந்த மாளிகையை நல்ல காரியத்திற்குப் பயன்படுத்துவதற்கு அரசு யோசனைகள் செய்யும். உடனடியாக இப்பொழுது மாற்றுவதாக இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஆளுநர் மாளிகையானது ஐ.ஜி. இருக்கும் மாளிகைக்கு மாற்றப்படும், அதற்காக மத்திய சர்க்காருடைய யோசனையைக் கேட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் பார்த்தேன். பிரதமர் அவர்களிடமிருந்து இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு முடிவு கிடைக்கக்கூடிய அளவில் குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர்கள் இதில் கவர்னர் மாளிகை மாற்றுவது தமிழ்நாட்டை மட்டும் கலந்து செய்யக் கூடியது அல்ல, எல்லா மாநிலங்களிலும் அதைப் பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும். ஆகவே, இதை அகில இந்திய ரீதியில் இந்தப் பிரச்சினையை ஆராயவேண்டும் என்று எழுதி யிருக்கிறார்கள். விரைவில் ஆராய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: ஆளுநர் மாளிகையைச் சுற்றியுள்ள இடங்களில் மிருகக் காட்சி சாலையாக அமைக்க செயற்குறிப்பு அரசிடம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே கவர்னர் அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்கு மாறினால், கவர்னர் தங்கியுள்ள இடம்போக மீதமுள்ள இடத்தில் மிருகக் காட்சி சாலை வைக்க இயலுமா என்று அரசு யோசித்துக் கொண்டு இருந்தது. இப்பொழுது அது இயலாத காரியமாகத் தென்படுகிறது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, ஆளுநர் மாளிகை மாநில அரசுக்குச் சொந்தமா அல்லது மத்திய அரசுக்குச் சொந்தமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அந்த மாளிகை மாநில அரசுக்குச் சொந்தம்; கவர்னர் எங்கே குடியிருப்பது என்று சொல்லும் உரிமை மத்திய சர்க்காருக்குச் சொந்தம்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆளுநர் மாளிகையை மாற்றுவதில் அகில இந்திய அடிப்படையில் மாற்ற வேண்டும் என்று மத்திய சர்க்கார் கடிதம் எழுதியிருப்பது பற்றிச் சொன்னார்கள். இவ்வளவு பரந்த நிலம் மற்ற மாநிலங்களிலும் இருக்கிறதா என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மற்ற மாநிலங்களில் நம்முடைய ஆளுநர் இடத்தைவிட மிகக் குறைவானதாகத்தான் இடங்கள் அங்கெல்லாம் இருக்கின்றன.

பரிசுச்சீட்டு அச்சிட இயந்திரங்கள்

* 496 **வினா—திரு. மா. பா. சாரதி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரிசுச்சீட்டு அச்சிட வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அதற்கான செலவு என்ன?